அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 11/2018

எனது இல : MPA/IAD/ADM/GA 02/DR/18

அரசாங்க நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2018.06.22

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும்
நியதிச்சட்ட நிறுவனங்களின் தலைவர்கள்

**“தேசிய போதைப் பொருள் ஒழிப்பு வாரம்” – பிரகடனப்படுத்தல்**
**(2018.06.26 இருந்து 2018.07.02 வரை)**

மேற்படி விடயம் சம்பந்தமாக சனாதிபதியின் செயலாளரினால் அனுப்பப்பட்ட இல. PS/DSP/DPU/07/18 மற்றும் 2018.06.12 ஆந் திகதிய சுற்றறிக்கை தொடர்பானது.

02. போதையற்ற தேசமொன்றை உருவாக்கும் பொருட்டு நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் ஒழிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதனூடாக, பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியாக அபிவிருத்திக்கான பின்புலம் வடிவமைக்கப்படுவதுடன், போதைப்பொருள் பாவனையை இல்லாதொழிக்கும் தேசிய பணியை நிறைவேற்றுவதற்கான நேரடிப் பங்களிப்பினையும் வழங்குகின்றது.

03. மேற்படி குறிக்கோள்களுடன், போதைப்பொருள் பயன்பாடு, சட்டவிரோத போதைப்பொருள் போக்குவரத்து என்பனவற்றுக்கு எதிராக, **“போதையற்ற தேசம்”** எனும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், போதைப்பொருள் பாவனையிலிருந்து இந்நாட்டினை மீட்டெடுக்கும் நோக்குடன், போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தினுள் நாடுதழுவிய ரீதியில் நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. அது தொடர்பாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு சனாதிபதி செயலணியுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களும் இணைந்து, **“போதைப்பொருள் பாவனை மற்றும் சட்டவிரோத போதைப்பொருள் போக்குவரத்துக்கு எதிரான சர்வதேச தின”த்துக்கு** நிகராக 2018.06.26 ஆந் திகதியில் இருந்து 2018.07.02 வரை **“தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வாரம்”** என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

04. அதற்கமைய, இத் தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தில் அனைத்து அரசாங்க நிறுவனங்களிலும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள, போதைப்பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு விசேட அவதானம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன், இனிமேலும் தங்கள் நிறுவனத்தினதும் அதனுடன் இணைந்த அனைத்து நிறுவனங்களிலும் இந் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுக்கும்படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

I. அனைத்து அரசாங்க நிறுவனங்களிலும் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக போதைப்பொருள் ஒழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவற்றை முனைப்புடன் பேணுமுகமாக, போதைப்பொருள் பாவனையின் காரணமாக தொழிற்றுறைக்கு, தனது நன்மதிப்பிற்கு ஏற்படும் பாதிப்பு, செயற்திறன் மற்றும் உற்பத்தித்திறனுக்கு ஏற்படும் பாதிப்பு என்பன தொடர்பாக அரசாங்க அலுவலர்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

II. புகைபிடித்தல், போதைப்பொருள் பாவனை தொடர்பான உருப்படங்கள் உள்ளடங்கிய பதாதைகள் அனைத்து அரசாங்க நிறுவனங்களிலும் காட்சிப்படுத்தப்பட வேண்டியதுடன், போதைப்பொருள் பயன்பாடு விளம்பரப்படுத்தப்படும் வகையில் சிறிய காட்சி அடங்கிய பதாகையோ, சித்திரமோ அரசாங்க நிறுவன வளாகங்களில் காட்சிப்படுத்துவது முற்றுமுழுதாக தடையாவதுடன், அவ்வாறான நிலைமைகள் நிகழாதிருக்கும்படி பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

III. போதைப்பொருள் பாவனையின் தீங்குகளைச் சுட்டிக்காட்டி, இச்செய்தியை சமுதாயத்திற்கு எடுத்துச் செல்லக்கூடிய நடைமுறைச் செயற்பாடுகளின் ஊடாக சிறார்களுக்கும், பெரியோர்களிடையே போதைப்பொருள் ஒழிப்பு செய்தியை பரவச் செய்தல்.

IV. தங்களது நிறுவனம் போதைப்பொருள் பாவனையற்ற நிறுவனமொன்று என்பதை தங்களது நிறுவனத்திற்கு வருகைதரும் சேவைபெறுநர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு, அறிவுறுத்தல் பதாகைகள், சுவரொட்டிகள், பேனர்கள் ஆகியனவற்றைக் காட்சிப்படுத்துவதனூடாக பொது மக்களுக்களிடையே இச் செய்தியை பரவச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

V. அவ்வாறே தாபனவிதிக் கோவையின் II ஆம் வகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவு தொடர்பாக தங்களது கவனம் ஈர்க்கப்பட்டு, அவ் ஏற்பாடுகளை செயலுருப்படுத்துவதற்கு விசேட அவதானம் செலுத்துதல்.

05. அதற்கமைய தேசிய போதைப்பொருள் ஒழிப்பு வாரத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி எனக்குப் பிரதியிட்டு, சனாதிபதி செயலகத்திற்கும் அனுப்பும்படி தயவுடன் அறியத் தருகின்றேன்.

06. அதிமேதகு சனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ், நடைமுறைப்படுத்தப்படும் **“போதையற்ற தேசம்”** எனும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை சிறப்பாக முன்னெடுப்பதற்கு மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களையும் தங்களது அமைச்சிலும்/திணைக்களத்திலும்/நிறுவனத்திலும் நடைமுறைப்படுத்துவது தங்களது பொறுப்பாகும் என்பதை மேலும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒப்பம்./ பத்மசிறி ஜயமான்ன
செயலாளர்
அரச நிருவாக, முகாமைத்துவ மற்றும்
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு

பிரதி:

01. சனாதிபதியின் செயலாளர் (சனாதிபதி செயலகம்) – தங்களது இல. PS/DSP/DPU/01/02/02 மற்றும் 2018.06.18 அந் திகதிய கடிதத்திற்கு அமைய தயவுடன் அறிந்துகொள்ளும் பொருட்டு